பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 10 புதன்கிழமை (24.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 60

## சாவகச்சேரி, மானிப்பாய் பகுதிகளில்

# நேற்று கிளைமோர் குண்டு வெடிப்புகள்

## பொதுமக்கள் மூவர் பலி; சிப்பாய் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜனவரி 24

சாவகச்சேரி நகரப் பகுதியில் சந்தைக்கு அருகாமையிலும், மானிப்பாயில் பிரதான சந்திக்குச் சமீபமாகவும் நேற்றுக்காலை கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. சாவகச்சேரியில் காலை 8 மணியளவிலும் மானிப்பாயில் காலை 7.45 மணியளவிலும் கிளைமோர்கள் வெடித்தன.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் இக் கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றன.

**சாவகச்சேரியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் வியாபாரிகளான இரு பெண்களும் இராணுவச் சிப்பாய் ஒருவரும் கொலையுண்டனர். மானிப்பாயில் வெங்காய வியாபாரி ஒருவர் பலியானார்.**

**இரண்டு சம்பவங்களிலும் இரு மாணவர்கள் உட்பட மொத்தம் 21 பேர் காயமுற்றனர்.**

**சாவகச்சேரியில் காலை 8 மணிக்கு**

சாவகச்சேரி - தனங்களப்பு வீதியில் - சாவகச்சேரி சந்தைக்கு அருகில் - நேற்றுக் காலை 8 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்தது.

இச்சம்பவத்தில் மரக்கறி வியாபாரிகளான பெண்கள் இருவரும், படைச் சிப்பாய் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். 17 பேர் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி - கற்குழி வீதியைச் சேர்ந்த தவராசாபூபதி (வயது-48) என்னும் 6 பிள்ளைகளின் தாய் சம்பவ இடத்திலேயே பலியானார். சாவகச்சேரிச் சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் இவர் ஈடுபட்டிருந்தார். இச்சம்பவத்தில் காயமடைந்த சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையைச் சேர்ந்த வையாட ஜானகி (வயது 52) என்பவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்

(04ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டபாய கிழக்கே விஜயம்

கொழும்பு, ஜன. 24

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ நேற்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கிழக்கே சென்றார். முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் சகிதம் வாகரை சென்ற அவர் அங்குள்ள நிலைமைகளை அவதானித்தார்.

வெலிகந்தையிலுள்ள 23ஆவது படைப் பிரிவு தலைமையகத்தில் படை அதிகாரிகளைச் சந்தித்து அவர் கலந்துரையாடினார். அங்கு கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை, படையினரின் முன்னேற்றம் என்பன குறித்து 23ஆவது படைப் பிரிவுத் தளபதி தயாரத்நாயக்க பாதுகாப்புச் செயலாளருக்கு விளக்கினார் என்று கூறப்பட்டது.

## மட்டு. சவுக்கடியில் 2 சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஜன. 24

மட்டக்களப்பு சவுக்கடியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்று மாலை இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அரசியல் ரீதியான தீர்வே நிரந்தர அமைதிக்கு அவசியம்

### பிக்குகள் முன்னணித் தலைவர் சொல்கிறார்

கொழும்பு, ஜன.24

இராணுவ நடவடிக்கைகள் தற்போது சாதகமான முறையில் இடம்பெற்றாலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல் தீர்வே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும்.

- இவ்வாறு தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமல தேரர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

தேசிய பிக்குகள் முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் பெப்ரவரி 22ஆம் திகதியுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு ஐந்து வருடங்கள்

(04ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் தாக்குதல்களுக்கு படையினர் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன.24

நேற்று சாவகச்சேரியிலும் மானிப்பாயிலும் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல்களை தமிழீழ விடுதலைப் புலிகளே செய்தனர் என்று பாதுகாப்புப் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் இத்தாக்குதல்களைக் கண்டிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனவரி 23 ஆம் திகதி யாழ். பிரதேசத்தில் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு கிளைமோர் தாக்குதல்களால் அப்பாவிப் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டு பாடசாலை மாணவர்கள் உட்பட 19 பேர் காயமடைந்தனர்.

மானிப்பாயில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலால் ஒருவர் கொல்லப்பட்டதுடன், பாடசாலை மாணவர்கள் 2 பேர் உட்பட 7 பேர் காயமடைந்தனர். மற்றைய கிளைமோர்த் தாக்குதல் சாவகச்சேரி பொதுச் சந்தைக்குச் சமீபமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த தாக்குதலில் பெண்ணொருவர் கொல்லப்பட்டதுடன் 12 பேர் காயமடைந்தனர். இந்த இரண்டு சம்பவங்களின் போதும் இராணுவத்தரப்பில் மூவர் காயமடைந்தனர்.

பொதுமக்கள் பற்றி சிந்திக்காது இவ்வாறு அவர்களைப் படுகொலை புரிந்தும் காயங்களுக்கு உள்ளாக்கியும் மேற்கொள்ளப்படும் இவ்வாறான மிலேச்சத்தனமான

(04ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையில் ஊடகவியலாளர்கள் நேற்று ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன.24

ஊடகச் சுதந்திரத்தை பாதுகாக்கக் கோரியும் ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை எதிர்த்தும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் பதாகைகளை ஏந்தியவண்ணம் ஊடகவியலாளர்கள் கோஷங்களை எழுப்பினர். சுமார் ஒரு மணிநேரம் இந்த ஆர்ப்பாட்டம் நீடித்தது.

''லக்மனைக் - கொன்று விட்டனர்'', ''சுகிர்தராஜனை - கொன்றுவிட்டனர்'', ''யாழ்ப்பாணத்தின் - பத்திரிகைகளில் நான்கு பேரை - கொன்றுவிட்டனர்'', ''கொலைகாரனைப் பிடிக்கவில்லை - யாரென்று தேடவில்லை - ஊடகத்திற்கு இன்று - சட்டத்தில் கூட சரணம் இல்லை.''

''பரமேஸ்வரியை சிறையில் வைத்து 2 மாதம் கடந்து விட்டது'', ''யாழ்ப்பாணத்தின் பத்திரிகைகளுக்கு கடதாசிகள் - ஏன் இல்லை?'', ''தமிழ் பத்திரிகைகள் இரண்டிற்கும் கிழக்கில் ஏன் இடமில்லை'' போன்ற கோஷங்களை அவர்கள் எழுப்பினார்கள்

யாழ். குடாநாட்டிற்கு பத்திரிகை அச்சிடுவதற்கான தாள்களை எடுத்துச் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளமை,

(04ஆம் பக்கம் பார்க்க)




ஊடகவியலாளர்கள் நேற்று கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

## வல்வெட்டியில் கிரனேட் தாக்குதல்

உடுப்பிட்டி, ஜன.24

வல்வெட்டித்துறை - உடுப்பிட்டி வீதியில் வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சமீபமாக நேற்று முற்பகல் 11.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

ரோந்து சென்ற படையினரை இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலின் பின் அப்பகுதியில் படையினரால் தேடுதல் நடத்தப்பட்டது. (1-155-115)

## யாழ்ப்பாணத்துக்கு உணவு அனுப்புவதை புலிகள் தடுத்தாலும் அரசு நிறுத்தாது!

### அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கூறுகிறார்

கொழும்பு, ஜன.24

யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள்களை அனுப்பவிடாது தமிழீழ விடுதலைப் புலிகள், உணவுக்கப்பல்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தினாலும் உணவுப் பொருள்கள் அனுப்புவதை அரசு ஒருபோதும் நிறுத்தாது.

- இவ்வாறு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றுகையில் கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

''கிழக்கில் பாரிய தோல்வியைச் சந்தித்துள்ள புலிகள், யாழ்ப்பாணத்தில் மக்களைப் பட்டினியால் கொல்லத் தீர்மானித்துள்ளனர். புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடு காரணமாக 'ஏ-9' பாதையை அரசு மூடியபோதும், யாழ். மக்கள் மீது அக்கறை கொண்டு கடல் மார்க்கமாக யாழ்ப்பாணத்திற்குத் தொடர்ந்தும் அரசால் உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அனுப்பப்படும் உணவுப் பொருள்கள் போதாதிருக்கின்றன என்று ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதால் 400 லொறிகளில் 'ஏ-9' பாதையின் ஊடாக உணவுப் பொருள்களை அனுப்ப ஜனாதிபதி ஏற்பாடுகளைச் செய்தார்.

அனுப்பப்படும் பொருள்களை புலிகள் அபகரிக்க மாட்டார்கள் என அவர்களிடமிருந்து உத்தரவாதம் பெற்றுத் தருமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஆகியவற்றை நாம் கேட்டுக்கொண்டோம். அக்குழுக்கள் இதைப் புலிகளுக்கு அறிவித்த போதிலும், புலிகள் பதில் எதனையும் தெரிவிக்க

(04ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தோல்வியடைந்தவர்கள் தெற்கில் இனக்கலவரத்தை தூண்ட முயல்கின்றனர்

### புலிகள் மீது இராணுவப் பேச்சாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.24

கிழக்கில் தோல்வியடைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள், தெற்கில் இனக் கலவரத்தை ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள். மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய பிரசாத் சமரசிங்க இதுபற்றி மேலும் கூறியதாவது:-

''கிழக்கில் படுதோல்வியைச் சந்தித்துள்ள புலிகள், தெற்கில் இனக் கலவரத்தைத் தூண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதற்கமைவாகவே ஏற்கனவே நிட்டம்புவவிலும், ஹிக்கடுவையிலும் பஸ்ஸில் இரண்டு குண்டுகளை வெடிக்கச் செய்து மக்களைக் கொன்றதோடு, இனக் கலவரத்தையும் தூண்ட முயற்சி செய்தனர்.

அந்த முயற்சி வெற்றியளிக்காததால் தொடர்ந்தும் அந்த மாதிரியான முயற்சியில் அவர்கள் ஈடுபடுவார்கள் என்பது நிச்சயம். மக்கள் இது விடயத்தில் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

பாதுகாப்புப் படையினருக்கு மக்கள் உரிய தகவல்களை வழங்க வேண்டும். சந்தேகத்திற்கிடமான பொருள்கள் மற்றும் நபர்களைக் கண்டால் உடனடியாகப் படையினருக்கு அறிவிக்க வேண்டும்'' - என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HNB

## ஹற்றன் நஷனல் வங்கி

அடகுப்பொருள்களை மீட்டல்/விற்பனைக்கான அறிவித்தல்

**எமது கிளைகளான யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய கிளைகளில் அடகு சேவை வசதி பெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு!**

நீங்கள் பெற்ற அடகுக்கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதனை அறியத்தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ.500/=) செலுத்தி காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அடகுப்பொருள்களை மீட்க/காலவதி திகதியை நீடிக்க, ஆவண செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப்பொருள்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

- முகாமையாளர்.

(சி.51900)


## மானிப்பாய் கோவில் பற்று ப.நோ.கூ.சங்கம் (வ.து)

### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**லிகிதர் பதவி எண் 302:16**

தகைமைகள்:

க.பொ.த. (சாதாரண) தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம் / சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி.

மேலதிக தகைமை:

கூட்டுப் பயிற்சியும் கணனி அறிவும் பெற்றிருத்தல் வேண்டும்.

வயதெல்லை: **25-45 வரை**

சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தை ரூபா 15 செலுத்தி பெற்று பூர்த்திசெய்து "தலைவர், ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய்" என்ற விலாசத்திற்குத் தபால் மூலம் 30.01.2007இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

22.01.2007

தலைவர்,
மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம்,
மானிப்பாய்.

(சி.51903)

## 3ஆம் ஆண்டு நினைவுகள்



மலர்வு 13 - 06 - 1938

உதிர்வு 26 - 01 - 2004

காசியப கோத்திரம் அமரர் பிரம்மஸ்ரீ

**சபாபதி ஐயர்** (சிவகடாக்ஷக்குருக்கள்)

(பிரதம குரு - நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் கோயில்)

சிரார்த்த திதி : 24.01.2007

இன்று (24.01.2007) புதன்கிழமை காலை மேற்படி ஆலயத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி அபிஷேகப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயில்,
நுணாவிற்குளம், சாவகச்சேரி. (57409) குடும்பத்தினர்.

## 31ஆம்நாள் நினைவலைகள்



அமரர்

**சந்திரசேகரம் சபாரத்தினம்**

(கட்டட ஒப்பந்தகாரர்)

பூர்வீக ஜனனம் 28.09.1951

புண்ணிய பயணம் 25.12.2006

திதி : 24.01.2007

எங்கள் அன்புத் தெய்வமே! இரவு பகல் தெரியாது பாரினிலே
எத்தனையோ கட்டடங்களை உருவாக்கியே
பாதியிலே விட்டுச் சென்றீரோ!
சுற்றத்தாருடன் அன்பையும் பண்பையும் வழங்கினீரே!
இன்று அத்தனையும் விட்டுச்சென்றீரே!
விண்ணுலக நன்றிக் கடனாக நாமென்ன செய்வோமோ?

25.12.2006 அன்று எமது குலவிளக்கின் மரணச்செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசித் தொடர்புகள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் உதவிபுரிந்தவர்களுக்கும் எம் இதய பூர்வ நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (24.01.2007) புதன்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்துகொள்வதோடு, மதியபோசனத்திலும் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

நீண்டியம்பற்றை,
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை. (56991)

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## தேவை

தியாகி அறக்கொடை நிறுவன சிறுவர் இல்லத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்

**1. சிறுவர் இல்ல மேற்பார்வையாளர் (பெண்)**

தகைமை:
வயது : 35 - 50
கல்வித் தராதரம் : க.பொ.த.(சா/த) சித்தி
அனுபவமுடையவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**2. சமையல் வேலையாளர் (பெண்)**

தகைமை:
வயது : 35 - 50
அனுபவமுடையவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தங்கள் விண்ணப்பத்தினை சுய விவரங்களுடன் 30.01.2007 இற்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

527, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

செயலாளர்,
தியாகி அறக்கொடை நிறுவனம்.

## தவறிவிட்டது

கதிரவேலு ஜனனி என்பவருடைய தேசிய அ.அ. (இல.875020579V), விசேட அ.அ. (இல.091045357) சிறிய கைப்பையுடன் பிறவுண் வீதிக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திருமதி செந்தில்வேல், 71, பிறவுண் வீதி, யாழ். என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## கார் விற்பனைக்கு

நிசான் புளூபேர்ட், Luxury, full Options, Silver sray, 301-84xx.

தொடர்பு : 22, பண்டாரக்குளம் வீதி, நல்லூர் வடக்கு, தொலைபேசி : 0773024311

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள சிவப்பு நிற கொண்டா பென்ஸி மோட்டார் சைக்கிள் (7 Sri 8881) உடன் விற்பனைக்குண்டு. மண்ணெண்ணெய்க்கு மாற்றப்படாதது.

தொடர்பு : சி.கந்தசாமி,
வள்ளிவாசா, மீசாலை வடக்கு, கொடிகாமம்.
(சுமந்தொழில் சேவை நிலையத்திற்கு எதிர்ப்பக்க ஒழுங்கை)


COMPUTER EXPRESS

Head Office : No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd).
Branch : No 167, Kasthuriyar Road, Jaffna

80% Off

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Batch I : 26/01/2007 Batch II : 27/01/2007
Batch III : 28/01/2007 Batch IV : 31/01/2007

COMPUTER EXPRESS

Head Office : No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd).
Branch : No 167, Kasthuriyar Road, Jaffna

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

- Diploma in Hardware Engineering
- Diploma in Video Mixing
- Diploma in Graphic Designing
- Diploma in Computerized Accounting

ஒரேநாளில் ஆரம்பம் : 29/01/2007


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி கௌரி சண்முகலிங்கன் அவர்களின் அன்புத் தந்தை [illegible] அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம், யா/[illegible] பாடசாலை.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 10 . 01 . 1955

மறைவு 25 . 12 . 2006

அமரர்

**அப்புக்குட்டி துரைச்சாமி**

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர், இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்)

எம் கனவுகள் காற்றாய் கலைந்திட அரவணைக்கும் அன்புள்ளம் தானிழந்து தனிமரமாய் நாமிங்கு தவிக்கின்றோம்

வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 24.01.2007 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'புஷ்பமகால்' (57448) தகவல்: [illegible]
[illegible], கொக்குவில் மேற்கு. (இலங்கை வங்கி).


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### VACANCIES FOR THE POST OF SENIOR PROFESSOR/PROFESSOR

University of Jaffna will entertain applications from qualified persons for the Under mentioned posts:

Senior Professor/Professor in **Geography/History/Organic Chemistry**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.57, 755 - 12x900 - 68,555/p.m |
| Professor | RS'.50, 905 - *13x850* - *61,955/-p.m* |

**Note:** In addition to the above salary, the following allowances will also be paid:
i. An academic allowance equivalent to 25% of the basic salary
*ii. Cost* of living *allowance* of Rs.1,375/-p.m

**Statutory benefits:**

i. Sabbatical leave entitlement for the holders of the Post of Senior - Lecturer Gr. II and above.
ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in - the University *system*.
iii. Gratuity payments
iv. Employees' Trust Fund benefits.
v. Free Medical Services.

**Closing date: 20.04.2007**

Applications for the post of Senior Professor should be accompanied by the following in accordance with the University Grants Commission circular No.838 dated 26.01.2004:

a) The Curriculum Vitae
b) A self assessment, as per the Marking scheme, the applicants contribution to the following areas **after** the applicant became a Professor:
Teaching and academic development
Research and creative works
Dissemination of knowledge and University and National Development.

Applications for the post of Professor should be accordance companied by the following, in accordoance with the University Grants Commission circular No.869 dated 30.11.2005:

a) The Curriculum Vitae
b) A self assessment, as per the marking scheme of applicants whole career specifying contributions to:
i. Teaching and academic development
*ii.* Research and creative works and
iii Dissemination of Knowledge and University & National Deve--lopment.
c) Three copies of the publications, research papers and other relevant documents .
d) Title of five outstanding research papers / publications

Applications and other documents shall be sent to the **Vice-Chancellor** with a covering letter, Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar (Establishments).

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, 0n a payment of Rs. 100/- per form. Those who wish to Obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for more than one post should make separate applications.

Applicants from the University System / Govemment Departments/ Corporations and Statutory Board. should channel their applications through the Head of the respective Institutions. Applications received after the closing date will be. rejected without intimation. Only those applic its who possess the qualifications and experience for consideration will be called for an interview.

REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
22.01.2007


## நெஞ்சம் மறவாத 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **தம்பிராசா தம்பிநாயகம்**

(தனியார் சிற்றூர்திச் சேவை சாரதி)

தோற்றம் 21.08.1954

மறைவு 25.12.2006

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (24.01.2007) புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு பிரார்த்திப்பதுடன், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

A.G.Aலேன்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.
(57446)

## மரண அறிவித்தல்

### சத்தியசீலன் கிருஸ்ணலீலா



தாவளை, இயற்றாலை வரணியைப் பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியசீலன் கிருஸ்ணலீலா 19.01.2007 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சத்தியசீலனின் அன்பு மனைவியும் கிரிஷாந் தின் தாயும் சின்னத்தம்பி - செல்லம்மா - தம்பதியரின் மகளும் சின்னத்தம்பி - காலஞ்சென்ற செல்லம்மா தம்பதியரின் மருமகளும் தவமலர் (லண்டன்), லலிதாதேவி (லண்டன்), விக்கினேஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரி (ஆசிரியர், யா/வடமராட்சி ம.ம.கல்லூரி), செல்வநாயகம் (லண்டன்), கேதீஸ்வரன், உதயராணி, செல்வகுமாரி, சிந்து ஆகியோரின் சகோதரியும் தருமராஜா (லண்டன்), சந்திரகுமார் (லண்டன்), இந்திரநாதன் - சுகந்தினி (லண்டன்), காலஞ்சென்ற மகாராஜா சின்னத்துரை, கந்தசாமி (பிரான்ஸ்), தவமணி, ராணி, சிவசோதி ஆகியோரின் மைத்துனியும் தர்சன், தாருகா, மிதிலன் ஆகியோரின் சிறியதாயும் சிதம்பரத்தின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2007) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவளை, இயற்றாலை, வரணி. (57442) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 9933, 222 3837 - 222 9944

## ஆக்கிரமிப்பும் அச்சுறுத்தலும் புலிகளைப் பணிய வைக்குமா?

"எல்லோரும் ஏறி விழுந்த நொண்டிக் குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறி விழுந்தாராம்" - என்று பேச்சு வழக்கு உண்டு.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு கையாளும் அணுகுமுறையை இப்படித்தான் கணிக்கத் தோன்றுகின்றது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க போன்ற முன்னாள் ஜனாதிபதிகளும், அவர்களது அரசுகளும் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கையாண்டு கடைசியில் தோற்றுப் போன அதே கையாலாகாத அணுகுமுறையைத்தான் - தந்திரோபாயத்தைத்தான் - மஹிந்தரின் அரசும் இப்போது பின்பற்றுகின்றது என்பது தெளிவாகி வருகிறது.

ஒரு தெளிவற்ற - தீர்க்கதரிசனமற்ற - அரசியல் முதிர்ச்சியற்ற - சாத்தியமற்ற - ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்ட - அணுகுமுறையைத்தான் சிங்கள ஆட்சிப் பீடம், இவ் விடயத்தில் தொடர்ச்சியாகப் பின்பற்றி வருகின்றது என்பதை ஏற்கனவே இப்பத்தியில் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம்.

ஒருபுறம் போரைத் தீவிரமாக முடுக்கி விடும் இராணுவக் கெடுபிடிப் போக்கு. மறுபுறம் சமாதான வழித் தீர்வு குறித்து பிரபலாபம். - இதுவே சிங்களத்தின் இரட்டை வேட அணுமுறை.

கடந்த காலக் கொழும்பு அரசுகளால் தீவிர முயற்சியுடன் முன்னெடுக்கப்பட்டுத் தோல்வி கண்ட தந்திரோபாயம் இது என்ற உண்மையைக் கவனத்தில் கொள்ளாது, அதே பாணியைப் பின்பற்ற மஹிந்தரின் அரசும் முயல்கின்றது.

விடுதலைக்கான - உரிமைக்கான - கௌரவ வாழ்வுக்கான - நீதி, நியாயம் பெறு வதற்கான - தமிழரின் போராட்டம், ஆயுத வழிக் குத் திரும்பியுள்ள இன்றைய சூழலில் அந்த வழியிலேயே தீர்வையும் - தனக்கு விருப்பமான முடிவையும் - தமிழர் தரப்பு மீது திணிக்க முயல் கிறது தற்போதைய அரசு.

தமிழரின் அரசியல் தலைவிதியை, படைபலத்தை அடிப்படையாகக் கொண்டே நிர்ணயிப்பதற்கு, இந்த அரசு முயன்று வருகின்றது என்பதைக் கடந்த வாரம் இப்பகுதியில் சுட்டிக் காட்டியிருந்தோம். தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமித்து, அதன் மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று, தான் விரும்பும் அரைகுறைத் தீர்வைத் தமிழர் தலையில் கட்டிவிடுவதே அரசின் திட்டம் என்ற கருத்தையும் வெளிப்படுத்தியிருந்தோம்.

அக்கருத்துக்களை ஊர்ஜிதம் செய்வது போன்று, இலங்கை பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல வின் அறிவிப்பு அமைந்திருக்கின்றது.

கிழக்கில் கணிசமான பகுதியைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்டுக் கைப்பற்றிய பின்னர் - வாகரை வெற்றியை அடுத்து - இறுமாப்புடன் இந்த அறிவிப்பை அவர் விடுத்திருக்கின்றார்.

"மோதல்களை நிறுத்தி, பேச்சு மேசைக்குத் திரும்புவதற்குப் புலிகள் விரைந்து உடன்பட வேண்டும். இல்லையேல் மென்மேலும் சண்டைக்கு அவர்கள் முகம் கொடுக்க வேண்டியிருக்கும்." - என்று எச்சரித்திருக்கின்றார் அவர்.

யுத்த நிறுத்தத்துக்கு வழி செய்த புரிந்துணர்வு ஒப்பந்தம், நடைமுறையில் இருப்பதாகத் தெரிவித்துக் கொண்டே -

அந்த ஒப்பந்தப்படி ஒரு தரப்பின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் மற்றத் தரப்பு, படை நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடாது என்ற தெளிவான ஏற்பாடு இருக்கத் தக்கதாகவே -

கிழக்கில் பெரும்பாலான பகுதிகளிலிருந்து புலிகளைப் படை நடவடிக்கை மூலம் விரட்டி, அப்புறப்படுத்தி விட்டு இந்த அறிவிப்பை அரசு விடுக்கின்றது.

முன்னைய சிங்கள அரசுகள், இதே போன்ற தந்திரத்தைக் கையாண்டு பெற்ற அனுபவம் என்னவென்பது மறக்கப்பட்ட சரித்திரம் அல்ல.

இலங்கையுத்தக்களத்தில்படைவலுச்சமநிலை, காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டிருப்பதும், ஒரே சமச்சீர் நிலை நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடிப்பதில்லை என்பதும் அனுபவப் பாடங்கள்.

பதினெட்டு மாதங்களாக 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது, அரசுத் தரப்புக்குச் சாதகமாக மேம்பட்டிருந்த படைச் சமவலு நிலை, திடீரெனப் பதினெட்டு மணித்தியாலங்களில் தலைகீழாக மாறியமை மறுக்கப்படக் கூடியதல்ல. அது போல, கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மற்றும் விமான நிலையம் மீதான அதிரடித் தாக்குதலினால், ஒரு சில மணி நேரத்தில் படை வலுச் சமநிலை தலைகீழானதும் நினைவுகொள்ளத்தக்கது.

இத்தகைய சூழ்நிலையில் பாரிய படைக்கலச் சக்தியையும், சுடுகல வலுவையும் பயன்படுத்தி, புதிய புதிய படையெடுப்புகளை நடத்தி, தமிழர் மண்ணை ரணகளமாக்கி விட்டு, உடன் பேச்சுக்கு வராவிட்டால் இது போன்ற மென்மேலும் பல விபரீதங்களை எதிர்கொள்ள நேரும் என்று தமிழர் தரப்பை எச்சரிப்பதால் உருப்படியாக நடைபெறப்போவது எதுவுமில்லை.

இராணுவச் சமநிலை நிலையில் வீழ்ச்சி அல்லது பின்னடைவு கண்ட நிலையில், பேச்சுக்கு - அமைதி வழித் தீர்வுக்கு - புலிகள் இறங்கி வந்தனர் என்று கூறுவதற்கும் கடந்த காலங்களில் எந்தப் பதிவோ அன்றி உதாரணமோ இல்லை.

எனவே, இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கையும், அதை அச்சுறுத்தலாகக் காட்டி பேச்சுக்கு மசிய வைக்கும் - மடக்கிப் போடும் - மிரட்டல் தந்திரமும் புலிகள் விடயத்தில் பயன் தருமா என்பது சந்தேகத்துக்கு அப்பாற்பட்டது.

இத்தகைய நெருக்குதல் போக்கு அல்லது அழுத்த நடவடிக்கை, அமைதி எத்தனங்களில் இருந்து இரு தரப்புகளையும் மேலும் மேலும் விலத்திப்போக வைத்துப் பகையுறவையும், விரோத மனப்பான்மையையுமே வளர்க்கும். அதன் விளைவு மோசமானதாகவும், விபரீதமானதாகவும் அமையும் என்பதும் சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

இதனைப் பட்டறியவும் காலம் அதிகம் செல்லாது என்பதும் கடந்தகால அனுபவம்.

# குடாநாட்டில் கடந்த வருடத்தில் 583 பேர் காணாமற் போயினர்

## மனித உரிமை ஆணைக்குழுவில் பதிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.24

குடாநாட்டில் கடந்த ஆண்டு காலப்பகுதியில் 583 பேர் காணாமற்போயுள்ளனர். இவை பற்றிய விவரங்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் து.சுவேந்திரராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற கைதுகள், கடத்தல்கள் போன்ற சம்பவங்களின் போதே 583 பேர் காணாமற் போயுள்ளதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2006 ஆம் ஆண்டின் ஜனவரி - 52பேர், பெப்ரவரி - 33பேர், மார்ச் - 42பேர், ஏப்ரல் - 38 பேர், மே-59, ஜூன்-40 பேர், ஜூலை-50பேர், ஓகஸ்ட் - 68 பேர், செப்ரெம்பர் - 54பேர், ஒக்டோபர் - 33பேர், நவம்பர் -58 பேர், டிசெம்பர் -56 பேர் என்ற எண்ணிக்கையில் காணாமற் போயுள்ளனர்.

இதேவேளை, கடந்த ஆண்டில் கைது மற்றும் கடத்தப்பட்டவர்களில் 60 இற்கும் மேற்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் - என்று அவர் தெரிவித்தார். (அ-4)

## வதிரியில் வாகனம் தீமூட்டி எரிப்பு

கரவெட்டி, ஜன.24

வடமராட்சி, வதிரி டைமன் விளையாட்டுக் கழகத்துக்குச் சமீபமாக வைத்து "ஹன்ரர்" ரக வாகனம் ஒன்று எரியூட்டப்பட்டது.

நேற்றுக் காலை 8 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

எரியூட்டப்பட்ட வாகனம் சட்டவிரோதமாக மண் ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களில் ஒன்றென மக்கள் மத்தியில் பேசப்பட்டது. (அ-1-70)

## 150 பேர் பயணம் செய்யக்கூடிய "அக்குவாட்டிக்" படகு இப்போது சேவையில்

நல்லூர், ஜன.24

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில் இப்போது "அக்குவாட்டிக் II" என்ற படகும் தற்போது மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது.

ப.நோ.கூ. சங்க படகுகளுடன் மேற்படிப் படகும் ஒன்று விட்ட ஒருநாள் காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் சென்று பிற்பகல் 3.30 மணிக்கு மீண்டும் நெடுந்தீவிற்குத் திரும்புகின்றன.

'அக்குவாட்டிக்II' என்ற படகில் ஒரே தடவையில் 150 பேர் பயணம் செய்யக்கூடிய வசதி உண்டு.

இதே வேளை-

கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த அரசுக்குச் சொந்தமான படகான "குமுதினி" படகு பழுதடைந்துள்ளதால் பயணிகள் சிரமங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (1-202-111)

## வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வாகனம் தாக்கப்பட்டு ஒருவர் பலி! 4 பேர் காயம்

வவுனியா, ஜன. 24

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் பயணம் செய்த 'ஹன்டர்' வாகனத்தை இடைமறித்த ஆயுதபாணிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். நால்வர் காயமடைந்தனர். மூவர் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணியாளர்கள் ஒன்பது பேர், ஊழியர்களுக்கான சீருடையுடன் உலுக்குளம் பகுதியில் இருந்து 'ஹன்டர்' ரக வாகனம் ஒன்றில் வவுனியா நகரப் பகுதி நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வழியில் ஆயுதபாணிகள் சிலர் வாகனத்தை வழிமறித்துள்ளனர். வாகனத்தின் சாரதியான முஸ்லிம் ஒருவரை இறக்கி விட்டு வாகனத்தைக் கடத்திச் செல்ல முயன்றுள்ளனர். அப்போது வாகனத்திலிருந்து குதித்துத் தப்பியோட முயன்ற ஊழியர்களை நோக்கி ஆயுதபாணிகள் சுட்டுள்ளனர்.

இதனால், ஊழியர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். நால்வர் காயமடைந்தனர்.

ஏனைய மூன்று ஊழியர்கள், ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப் பட்டிருக்கின்றனர் என்று அஞ்சப்படுகிறது.

காயமடைந்த நால்வரும் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். அவர்களில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதால் அவரை அங்கிருந்து அனுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. (ஐ)

## திருமலை நகரில் கிளைமோர்கள் மீட்பு

திருகோணமலை - பொலிஸ் நிலையத்துக்கு அருகில் 400 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து 3 கிளைமோர் குண்டுகள், பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கிறது.

இவற்றுடன் வெடிக்க வைக்கும் கருவிகள் மற்றும் வயர்கள் போன்றவையும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் திருகோணமலை வாசி ஒருவர் வழங்கி இரகசியத் தகவலை யடுத்தே இந்த வெடி பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## இரவுவேளை மின் துண்டிப்பு வலி.மேற்கில் தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஜன.24

வலி.மேற்குப் பிரதேசத்தில் இரவு நேரத்தில் முன்னறிவித்தல் இன்றி மின் விநியோகம் துண்டிக்கப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மின் விநியோகம் மிகவும் அவசியமான நேர இடைவெளியில் ஒன்றான மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணிவரை மின்தடை ஏற்படுவதாக மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

தினமும் இதே நேரத்தில் மின்சாரம் தடைப்படுவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக பெற்றோரும் மாணவர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

வலிகாமம் மேற்கில் நடைமுறையில் உள்ள மின்வெட்டுக் குறித்து ஏற்கனவே முன்னரும் உதயனில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (அ-203)

## இந்தோனேஷியர்கள் இருவருக்கு காயம்

கொழும்பு, ஜன.24

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் கடற்புலிகளின் தாக்குதலில் சிக்கிய 'சிற்றி ஒவ் லிவர்பூல்' கப்பலில் பணியாற்றிய இரண்டு இந்தோனேஷிய நாட்ட வர் கள் காயமடைந்துள்ளனர்.

கப்பலில் பணியாற்றிய இந்தோனேஷியர்கள் இருவர் சிறு காயங்களுக்கு இலக்காகியுள்ளனர் என்பதை அந் நாட்டுத் தூதரகம் உறுதிப்படுத்தியிருக்கிறது.

இரண்டு பணியாளர்களையும் பார்வையிடுவதற்கு கொழும்பில் உள்ள இந்தோனேஷியத் தூதரக அதிகாரிகள் முயற்சி எடுத்து வருகின்றனர். (ஐ)

## பல பொருள்களின் விலைகள் நேற்று ஓரளவு குறைந்தன

யாழ்ப்பாணம்,ஜன.24

குடாநாட்டில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் நேற்று வழமையைப் போல உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

அதனையடுத்து சில உணவு மற்றும் பாவனைப் பொருள்களின் விலைகள் நேற்று ஓரளவு குறைவடைந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கடலில் நடந்த மோதலில் சிக்கி வணிகக் கப்பல் ஒன்று சேதத்துக்குள்ளானமை, ப.நோ.கூ.சங்கங்களில் இருப்பு மதிப்பீடு ஆகியன காரணமாக திங்கட்கிழமையன்று உணவு பொருள், விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தது.

இதன் காரணமாக தனியார் வியாபாரிகள் சில முக்கிய பொருள்களின் விலையைப் பல மடங்காக அதிகரித்தனர். பொருள்களின் விலைகள் அதிகரித்ததையடுத்து மக்கள் முண்டியடித்துக்கொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்வ[illegible].

குடாநாட்டில் உள்ள சகல ப.நோ.கூ.சங்கங்களின் சகல கிளைகளிலும் நேற்றுக்காலை தொடக்கம் வழமையான விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, மக்களுக்குத் தேவையான பொருள்கள் வழங்கப்பட்டதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனையடுத்து நேற்று யாழ். நகரில் சில பொருள்களின் விலைகள் குறைவடைந்தன. தேங்காய் எண்ணெய், உருளைக்கிழங்கு, செத்தல்மிளகாய், நெத்தலிக்கருவாடு, சவர்க்காரம் ஆகியவற்றின் விலைகள் குறைவடைந்து காணப்பட்டன.

யாழ். செயலக அதிகாரிகளும் நேற்றுக் காலை யாழ்.நகருக்குச் சென்று தனியார் வர்த்தகர்களின் விற்பனை நடவடிக்கைகளைக் கண்காணித்தனர்.

சவர்க்காரம் நூறு ரூபாவிற்கும், தேங்காய் எண்ணெய் 300 ரூபா முதல் 350 ரூபாவுக்கும், மரக்கறி எண்ணெய் 300 ரூபாவிற்கும், சம்போ 10 ரூபாவிற்கும், உருளைக் கிழங்கு 90 ரூபாவிற்கும் நேற்று விற்பனை செய்யப்பட்டன. (அ-1-8-79)

**நாளை**

தை - 11
வியாழக்கிழமை
25.01.2007
திதி: ஸப்தமி
முன்னிரவு : 08.52
நட்சத்திரம் : ரேவதி
பிற்பகல்: 12.02 வரை
சுப[illegible]: 08.06-09.36
ரா[illegible]: 02.06-03.36

### குடாநாட்டின் குட்டிச் செய்திகள்

## பல்கலைக்கழகத்தில் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊழியர்களின் அடையாள வேலைநிறுத்தம் நேற்று இடம்பெற்றது.

கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சம்பளங்களில் காணப்படும் முரண்பாடுகளை நீக்கக்கோரி மூன்று அம்சக்கோரிக்கையை முன்வைத்து நேற்றைய அடையாள வேலை நிறுத்தம் இடம்பெற்றது.

இலங்கைப் பல்கலைக்கழக ஊழியர் தொழிற் சங்கத்தின் அழைப்பின் பேரில் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இடம்பெற்றுள்ளது. (1-68)

## நல்லூர் ஆலயப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

நல்லூர் ஆலயப் பகுதியில் திட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நல்லூர் கந்தன் ஆலய வழிபாட்டுக்கு வரும் பக்தர்களின் சைக்கிள்களே இவ்வாறு திருடப்பட்டு வருகின்றன. ஆலய வழிபாட்டுக்கு வரும் பக்தர்கள் தமது சைக்கிள்களை ஆலயச் சுற்றாடலில் நிறுத்தி விட்டுச் செல்கின்றனர். பக்தர்கள் ஆலயத்தினுள் சென்றசமயம் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர். (1-79)

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

தென்மராட்சிப் பிரதேசத்தின் சில கிராம அலுவலர் பிரிவுகளுக்கான பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கைதடி தெற்கு, கைதடி கிழக்கு ஆகிய பிரிவுகளுக்கான மீளாய்வு அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களிலும்-

தனங்களப்பு பிரிவுக்கான மீளாய்வுப் பிரதேச செயலகத்திலும் நடைபெறும். (1-202)

## மானிப்பாய் வாசியைக் காணவில்லை

வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடுட்டுடை, மானிப்பாயைச் சேர்ந்த வீ.இரத்தினசிங்கம் (வயது-35) என்பவரையே காணவில்லையென அவரது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வீட்டிலிருந்து நல்லூருக்கு வேலை நிமித்தம் புறப்பட்டுச் சென்ற இவர் மீண்டும் வீடு வந்து சேரவில்லையென்று முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-8)

## 'சாளரம்' வெளிவந்தது

மாணவர்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரும் 'சாளரம்' சஞ்சிகை மீண்டும் வெளிவந்துள்ளது. தமிழ் மாணவர்களின் தனித்துவமாக வெளிவந்துகொண்டிருக்கும் மேற்படி இதழ் கடந்த சில மாதங்களாக வெளிவரவில்லை. (அ-1)

## நேற்றும் பகிஷ்கரிப்பு

ஹாட்லிக்கல்லூரி மற்றும் வேலாயுதம் ம.வி ஆகியவற்றின் மாணவர்களை விடுவிக்குமாறு கோரி மேற்கொள்ளப்படும் பகிஷ்கரிப்பு காரணமாக வடமராட்சிப் பாடசாலைகள் இரண்டாவது நாளாக நேற்றும் இயங்கவில்லை. பாடசாலை பஸ் சேவைகளும் இடம் பெறவில்லை. (அ-1-70-115)

## அறநெறிப் பரீட்சை

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பொதுப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் இப்பரீட்டை நடைபெறும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகலில் புலிகளின் ஆயுதக் களஞ்சியத்தை கைப்பற்றியதாக படையினர் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 24

மட்டக்களப்பு - வெருகல் பகுதியில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகளின் பெரும் ஆயுதக்களஞ்சியம் ஒன்றைப் படையினர் கண்டுபிடித்திருக்கின்றனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்திருக்கிறார். நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''வெருகல் பகுதியில் 10 வருடங்களுக்குப் பின்னர் விடுதலைப்புலிகளின் பாரிய ஆயுதக் களஞ்சியம் ஒன்றை நாம் கைப்பற்றியிருக்கிறோம். அங்கு வெடித்துச் சிதறிய நிலையில் காணப்பட்ட 122 மில்லிமீற்றர் ஆட்லறி - 02, ரி -56 துப்பாக்கிகள் - 360, தற்கொலை அங்கி - 02 மற்றும் ஆட்களுக்கெதிரான கண்ணிவெடிகள் 867 ஆகிய ஆயுதப் பொருள்கள் இந்தக் களஞ்சியத்தில் காணப்பட்டன.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை-

கடந்தவாரம் வாகரையிலேற்பட்ட ஷெல் தாக்குதலில் அப்பகுதியிலுள்ள வைத்தியசாலை சேதமடைந்தது என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும், செஞ்சிலுவைச் சங்கமும் கூறியிருந்தன. அது முற்றிலும் பொய்யான விடயம். ஏனெனில், நாம் வாகரையை மீட்டபோது அங்கு எதுவித சேதமும் காணப்படவில்லை. வாகரை வைத்தியசாலைக்கு முன்புறம்- 50 மீற்றர் தூரத்தில் - அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் மூன்று முகாம்களை பாதுகாப்பதற்காகவே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் இவ்வாறான அப்பட்டமான பொய்யைக் கூறியிருக்கின்றனர் என்றும் பிரசாத் அமரசிங்க தெரிவித்தார். (ஐ- 03)

# புலிகளிடமிருந்து மக்களை மீட்கும் தாக்குதல்களை அரசு தொடருமாம்!

## அமைச்சர் ரம்புக்வெல கூறுகிறார்

கொழும்பு, ஜன. 24

கிழக்கு மக்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதச் செயற்பாட்டில் இருந்து மீட்டெடுப்பதற்காக மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையில் அரசு பாரியளவு வெற்றியீட்டியுள்ளது.

ஒரு பொறுப்பு வாய்ந்த அரசு என்ற வகையில் புலிகளின் பயங்கரவாதச் செயற்பாட்டிற்குள் சிக்கும் மக்களை இனவேறுபாடின்றி மீட்டெடுப்பதற்கான தாக்குதல் நடவடிக்கையை அரசு தொடர்ந்து முன்னெடுக்கும்.

இவ்வாறு அமைச்சரும் பாதுகாப்புத் துறை பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கில் மூவின மக்களையும் இலக்கு வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி வந்தனர். இறைமையுள்ள பொறுப்புவாய்ந்த ஓர் அரசு என்ற வகையில் இந்த மக்களைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை.

பயங்கரவாதத் தாக்குதல்களில் நாட்டு மக்கள் சிக்குகின்ற சமயத்தில் அம்மக்களை மீட்டெடுக்கும் பொறுப்பு அரசுக்குரியது என இலங்கையின் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பை அரசு சரிவர நிறைவேற்றியுள்ளது.

கிழக்கு மக்களை புலிகளின் பிடியிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசு மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான வாகரை மற்றும் கதிரவெளி உள்ளிட்ட பல பிரதேசங்கள் தற்போது அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துள்ளன. இது அப்பிரதேச மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

மீட்கப்பட்ட பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களைக் குறுகிய மற்றும் இடைக்கால அடிப்படையில் மீள்குடியமர்த்த தற்போது அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஜெனிவாப் பேச்சில் இணக்கம் காணப்பட்ட விடயங்களில் ஒன்று வடக்கு-கிழக்கை முழுமையாக அபிவிருத்தி செய்வது என்பதாகும். புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகள் அங்கு தலைதூக்கியிருந்தமையால் அபிவிருத்தி நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதில் அரசு பல சிக்கல்களை எதிர்நோக்கியது. இப்போது அவை நீக்கப்பட்டுவிட்டதால் அபிவிருத்தி நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்படும்.

தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களின் இடங்கள் துரிதமாகப் புனரமைக்கப்படும். கிழக்கில் பிறந்து வளர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவார்கள். அவர்களின் உரிமை பறிக்கப்படமாட்டாது - என்றார். (த-07)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி பொன்னம்பலம்



நயினாதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்பலம் 22.01.2007 திங்கட்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் செசிலியாவின் அன்புக் கணவரும் செபஸ்ரியான் அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தேவதாஸ் (கனகு) மாகிமைதாஸ் (அன்ரன்), ஞானதாஸ் (சந்திரன்), மேரிரதி, தவமணி, பாஸ்கரன் (கரன் -அரியாலை), றுபீமேரி, கிருபதாஸ் (ராசன்), ஜேசுதாஸ் (உதயன்), மேரி தமயந்தி ஆகியோரின் அன்பு தந்தையும் இராஜேஸ்வரி, அலன்றோய், சிவராசா, ஆனந்தி, ஜெயா, தர்மலிங்கம், புஸ்பலதா, சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற கோபாலு மற்றும் நாகம்மா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2007) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக் பூதவுடல் நயினாதீவு சல்லிப்பரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.

(57454)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இரத்தினம் ஐயாத்துரை

தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் மானிப்பாய் உச்சியோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் ஐயாத்துரை நேற்று (23.01.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்துரையின் மனைவியும் சிறிகரன், பிரபாகரன் காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் நளாயினி ஆகியோரின் தாயும் செல்வமலர், ஜெயநந்தினி ஆகியோரின் மாமியும் மயூரன், மயூரி, பிரவின், ரேகன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2007) புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மானிப்பாயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உச்சியோடை,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
ஊ. ஐயாத்துரை
(கணவர்).

### மாணிக்கம் நாகலிங்கம்

கொல்லநாடி, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற மாணிக்கம் - மீனாட்சி தம்பதியரின் புதல்வர் மாணிக்கம் நாகலிங்கம் நேற்று (23.01.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் வேலுப்பிள்ளை பாறுவதியின் அன்புச் சகோதரரும் தங்கமலர் (ஜேர்மனி), நந்தா, கலாநிதி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவதுரைநாதன், விஜயகுமார், ஜெகதீஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும் ஜனார்த்தனன் (ஜேர்மனி), திருமதி கரிஹரன் இந்திகா (ஜேர்மனி), அருண் (நோர்வே), ஆருதி (நோர்வே), ஆரண்யா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இன்று முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொல்லநாடி,
வதிரி, கரவெட்டி.

தகவல்:
திருமதி நகுலா விஜயகுமார்
(மகள்).

NEW SCIENCE COLLEGE
2008 மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க
மின்னியல்
Sat., Sun. 11 - 12.30
ஆரம்பம்: 27.01.2007
வெப்பவியல்
Mon., Thu. 3.30 - 4.30
ஆரம்பம்: 30.01.2007
By:
M.கருணாநிதி

தேவை
கணனி அறிவுடைய ஆண்/ பெண் தேவை. சுயவிவரக்கோவையை 27.01.2007 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
PC Systems
Alady Junction, Jaffna Road Manipay.
Tele: 021 - 4591525, 021 - 4591142

# சித்தி அமரசிங்கம் காலமானார்

திருகோணமலை, ஜன. 23

திருகோணமலை மாவட்டத்தின் மூத்த இலக்கியவாதியும் முதுபெரும் கலைஞருமான சித்தி அமரசிங்கம் நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமானர். இறக்கும்போது அவருக்கு வயது 70. அவரது இறுதிக்கிரியைகள் நேற்று கொழும்பில் நடைபெற்றன.

சிறந்த கவிஞராகவும், நாடக நடிகராகவும், எழுத்தாளராகவும் பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுத் திகழ்ந்த அமரர் சித்தி அமரசிங்கம் முன்னாள் பத்திரிகையாளருமாவார்.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'தென்றலும் புயலும்' என்ற திரைப்படத்தில் அவர் நகைச்சுவை நடிகராக முக்கிய பாத்திரம் ஏற்று நடித்திருந்தார்.

திருமலையில் தனி ஒருவராக நின்று 'ஈழத்து இலக்கியச்சோலை' என்ற அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் திருமலை மாவட்ட எழுத்தாளர்களின் படைப்புக்களை அச்சேற்றி நூல் வடிவாக்கினார். (த)

# பாடசாலைகளுக்கு சீருடைகள், நூல்கள்

யாழப்பாணம், ஜன.24

குடாநாட்டு பாடசாலை மாணவர்களுக்கான இலவசச் சீருடைகள் மற்றும் பாடநூல்கள் வலயக்கல்வி அலுவலகங்கள் ஊடாக பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

சகல வகுப்பு மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் தரம் 1 முதல் 5 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கும், தரம் 6 முதல் 9 வரை கல்வி கற்கும் மாணவர்களில் ஆண்களுக்கான சீருடைகள் மட்டுமே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தரம் 9 முதல் 13 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கான சீருடைகளும் அனுப்பிவைக்கப்படவில்லை. இதேவேளை கல்வித்திணைக்கள அலுவலகங்களின் பாவனைக்கான காகிதாதிகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-04)

## யாழ்ப்பாணத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

'ஏ-9' பாதையை நிரந்தரமாகத் திறக்க வேண்டும் என்றே புலிகள் கூறிவருகின்றனர். ஜெனிவாப் பேச்சிலும் அதையே கூறினர். அப்படித் திறப்பதாக இருந்தால் நாம் முன்வைக்கும் நிபந்தனைகளைப் புலிகள் ஏற்க வேண்டும் என நாம் கூறுகின்ற போதிலும் அவற்றை ஏற்கப் புலிகள் தயாரில்லை.

இந்த நிலைமை காரணமாகத் தொடர்ந்தும் கடல் மார்க்கமாகக் கப்பல்கள் மூலமே உணவுப் பொருள்களை அனுப்ப நாம் தீர்மானித்தோம்.

ஆனால், அந்த நடவடிக்கையையும் முற்றாக நிறுத்தச் செய்யும் நோக்கில் புலிகள் இப்போது உணவுக் கப்பல்கள் மீது தாக்குதல்களைத் தொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

எந்த வகையிலேனும் அரசின் உதவி, தமிழ் மக்களுக்குச் சென்றடையக் கூடாது. அவர்கள் பட்டினியால் சாகவேண்டும் என்ற நோக்கிலேயே புலிகள் செயற்படுகின்றனர்.

தமிழ் மக்களின் பாதுகாவலன் அரசே தான் என்பதையும், புலிகள் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்பதையும் புலிகள் தமது பயங்கரவாதச் செயற்பாடுகள் மூலம் நிரூபித்து வருகின்றனர்.

இதனை உணர்ந்த மக்கள், புலிகளின் பிடியில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு வருகின்றனர். புலிகள் என்னதான் தாக்குதல்களை நடத்தினாலும் அவற்றை முறியடித்து கப்பல்கள் மூலம் தொடர்ந்தும் பொருள்கள் அனுப்பப்படும்'' - என்றார். (ஐ)

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்த்தியாகின்றன. அதற்கு முன்னர் அரசு அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வேண்டும்.

இதேவேளை, தேசிய பிக்கு முன்னணி நாடு முழுவதும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ரத்துசெய்யும்படி கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தும்.

அத்துடன் இதுதொடர்பான மகஜர் ஒன்றை எதிர்வரும் 25ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சொன்னார். (த-2)

நியூட்டன் அக்கடமி
கோண்டாவில்.
புதிய பிரிவு பேச, எழுத, வாசிக்க
சிங்களம்
பேராசிரியர்
By: லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:
27.01.2007 Sat. 11.30
(Sat./ Sun. -11.30)

## சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு சிகிச்சை பயனளிக்காமல் மரணமானார்.

கே.ரவீந்திரன் (வயது-30, சாவகச்சேரி), எஸ்.யோகநாதன் (வயது-47, சாவகச்சேரி), ஏ.சூரியகுமார் (வயது-31, சாவகச்சேரி), ஆர்.இராஜ்குமார் (வயது-26, சாவகச்சேரி).

எஸ்.ராஜலக்ஷ்மி (வயது-40, சாவகச்சேரி), எஸ்.மதனமோகன் (வயது-26, சாவகச்சேரி), எம்.மோகனதாஸ் (வயது-27, சாவகச்சேரி), ரி.துஷாநந் (வயது-23, மீசாலை), மரியகுலம் (வயது-60, அச்சுவேலி), செ.இராஜேந்திரம் (வயது-50, மீசாலை), வி.ஜெயராசா (வயது-54, கைதடி), செ.குமாரசாமி (வயது-64, மீசாலை), கே.சஞ்சித்குமார் (வயது-19, சாவகச்சேரி), செ.இராசதுரை (வயது-57, மீசாலை), ஜெசிந்தா (அரியாலை) ஆகியோர் உட்பட 17 பேர் காயமடைந்துள்ளனர். இவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவத்தை அடுத்து சாவகச்சேரி நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. நகரப் பகுதி சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக்காணப்பட்டது. கண்டி வீதியில் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது.

சம்பவத்தின் போது மோட்டார் சைக்கிள் தரிப்பிடத்தில் தரித்து நின்றதாகக் கூறப்படும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் முற்றாகச் சேதமடைந்தன. இராணுவ 'ரக்' ஒன்றும் சேதமடைந்தது.

**மானிப்பாயில் காலை 7.45 மணிக்கு**

நேற்றுக்காலை 7.45 மணியளவில் மானிப்பாய் வீதியில் - பிப்பிலி மயானத்திற்குச் செல்லும் வீதி முகப்பில் கடைகளுக்கு அருகில் இந்தக் கிளைமோர் குண்டு வெடித்தது.

மானிப்பாய் - கட்டுடை வீதியில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பில் ஒருவர் பலியானார். மற்றும் ஐந்து பேர் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்து பலாலி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

சம்பவம் இடம்பெற்றவேளை சைக்கிளில் வெங்காய மூடைகளுடன் அந்த வழியாகச் சென்ற ஒருவர் மரணமானார். இவர் சங்கானைச் சந்தையில் கொள்வனவு செய்த வெங்காயத்தை மானிப்பாய் சந்தையில் விற்பனை செய்யும் வியாபாரியென விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த தங்கராசா தர்மராஜா (வயது 38) என்பவரே உயிரிழந்தவர் என்று பின்னர் இனங்காணப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார்.

சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இத்தாக்குதல் சம்பவத்தில் கே.ஜெயந்தன் (வயது 40 - சங்கானை), எஸ்.கரன் (வயது 23 - மானிப்பாய்), ஏஸ்.யோகநாதன் (வயது 47 - மானிப்பாய்), எஸ்.ஜெகதீஸ்வரன் (வயது 15 - மானிப்பாய்), கே.டிறேசன் (வயது 17 - மானிப்பாய்) ஆகியோர் காயமடைந்தனர். அவர்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-1-4-79-86)

## கிளைமோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களை இராணுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. இவர்கள் பற்றி அறிந்தும் அவர்களுக்கெதிராக செயற்பட முடியாமலிருக்கும் மக்களிடத்தில் அவர்களைப்பற்றிய தகவல்களைத் தந்துதவி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்று உள்ளது. (அ)

## கோட்டையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் திருகோணமலையில் தமிழ்ப் பத்திரிகைகளை விற்பனை செய்ய ஆயுதக் குழு ஒன்று தடை விதித்தமை, ஊடகவியலாளர்களான சுகிர்தராஜன் மற்றும் ஐவர் கொலை செய்யப்பட்டமை, யாழ்.குடாநாட்டில் பத்திரிகைகள், ஊடகவியலாளர்களுக்கு விதிக்கப்படும் தடைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளை முன் வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடகத்துறை ஊழியர் தொழிற் சங்க சம்மேளனம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், முஸ்லிம் மீடியா போரம், சுதந்திர ஊடக இயக்கம் ஆகிய ஐந்து ஊடக அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தன.

BRIGHTMAN
பிறவுன் வீதி, நீராவியடி, யாழ்.நகர்.
புதிய பிரிவுகள் பேச, எழுத, வாசிக்க
சிங்களம்
பிரிவு-3 - 26.01.2007
Fri. 2
பிரிவு-4 - 27.01.2007
Sat. 4
பேராசிரியர்
By: லீலாக்கிருஸ்ணன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org